# THE STUDY OF THE EVALUATION OF ECONOMY ON THE DAMAGE TO THE ENVIRONMENT CAUSED BY THE FUNCTIONS OF RICE MILLS IN THE KALMUNAI DIVISION.

PERMANENT REFERENCE
301.40363 E3105493
THA
PR
Faculty of Commerce & Management
Eastern University, Sri Lanka.

Mr. RAJAN THAVASEELAN

FCM453
Project Report
Library - EUSL

DEPART. OF ECONOMICS
FACULTY OF COMMERCE AND MANAGEMENT
EASTERN UNIVERSITY
SRILANKA
2001

## ஆய்வுச் சுருக்கம்

சூழல் என்பது எம்மையும் எம்மைச் சூழவுள்ள அங்கிகளையும் குறிக்கின்றது. இத்தகைய சூழலானது இயற்கையின் கொடையாக எமக்குக் கிடைத்த பெறுமதி மதிப்பிட முடியாத பொக்கிசமாக உள்ளது. ஆனால் இதன் மதிப்பினையும் பயன்பாட்டினையும் உணராத நாம் இச் சூழலுக்கு பல்வேறு வழிகளிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றோம். இன்று நிலைத்து நிற்கும் அபிவிருத்தி பற்றிப் பேசப்பட்டாலும் விஞ்ஞான வளர்ச்சியின் கீழ் சூழல் வெகுவாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பதோடு இப் பாதிப்புக்கள் மனித சமூகத்திற்கு பேர் ஆபத்துக்களை ஏற்படுத்துவனவாகவும் காணப்படுகின்றன. ஆனால் விலைமதிக்க முடியாத இச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களின் உண்மைப் பெறுமதியை நாம் உணர்வதில்லை. இப் பாதிப்புக்கள் அளவிடக் கூடியவையாகும். காரணம் சூழலுக்கு ஏற்படுத்தப்படும் பாதிப்புக்கள் மனிதனிலும் தாக்கம் புரிவதனால் மனிதன் இத் தாக்கங்களுக்காக மேற்கொள்ளும் செலவுகளின் மூலமாக இவற்றை நாம் அளவிட்டுக் கொள்ள முடியும். எனவே இப் பாதிப்புக்களை அளவிட்டுக் கொள்வதும் அவற்றின் தாக்கங்களை உணர்ந்து செயற்படுவதும் அவசியமானதாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் சூழலுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் மூலங்கள் பல உள்ளன. இவற்றுள் ஒன்றான, சூழலுக்கும் மனித சமூகத்திற்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் அரிசி ஆலைத் தொழிற்பாடுகளினால் ஏற்படுகின்ற சமூக, சூழல் பாதிப்புக்கள் என்னால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக எனது ஆய்வு கல்முனைப் பிரதேசத்தை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது. அரிசி ஆலைத் தொழிற்பாடுகளினால் ஏற்படும் சமூக, சூழல் பாதிப்புக்களை இனம் காணலும் அவற்றின் பொருளாதாரப் பெறுமதிகளை மதிப்பிடுவதாகவுமே எனது ஆய்வு அமைகின்றது.

எனது இவ் ஆய்வின் முதல் அத்தியாயத்தில் கல்முனைப் பிரதேசத்தின் அரிசி ஆலைத் தொழிற்பாடுகள் பற்றியும் அதனால் ஏற்படும் சமூக, சூழல் பாதிப்புக்கள் பற்றியும் சுருக்கமாகக் கூறியுள்ளேன். இரண்டாம் அத்தியாயமான நூலாய்வில் சூழலின் முக்கியத்துவம், சூழலின் பாதிப்புக்கள், அரிசி ஆலைத் தொழிற்பாடுகளினால் ஏற்படும் சமூக, சூழல் பாதிப்புக்கள் பற்றியும் விளக்கியுள்ளேன். மூன்றாம் அத்தியாயத்தினை பிரதேச அறிமுகமாக அமைத்து கல்முனைப் பிரதேசம் பற்றிய சமூக, சூழல் நிலைமைகளை எடுத்துக் காட்டியுள்ளேன். நான்காம் அத்தியாயத்தில் ஆய்வு முறைமை பற்றியும், ஐந்தாம் அத்தியாயத்தில் வினாக்கொத்து மூலமாகப் பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்து விளக்கியுள்ளதோடு இறுதி அத்தியாயத்தில் ஆய்வின் முடிவினையும் ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளேன்.

இந்த ஆய்வில் கல்முனைப் பிரதேசத்தில் உள்ள பெரிய அளவிலான அரிசி ஆலைகளே ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. இந்த வகையில் அரிசி ஆலைத் தொழிற்பாடுகளினால் சமூகத்திற்கும், சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புக்களை மக்கள் மத்தியில் தெரியப்படுத் வேண்டியது ஓர் முக்கிய கடமையாகும்.

# பொருளடக்கம்


| விபரம் | பக்கம் |
| --- | --- |
| நன்றியுரை | I |
| ஆய்வுச் சுருக்கம் | II - III |
| பொருளடக்கம் | IV |
| அத்தியாயம் - I | 1 - 7 |
| அத்தியாயம் - 2<br>நூலாய்வு | 8 - 29 |
| அத்தியாயம் - 3<br>பிரதேச அறிமுகம் | 30 - 42 |
| அத்தியாயம் - 4 | 43 - 46 |
| அத்தியாயம் - 5<br>தரவுப் பகுப்பாய்வும் விளக்கமும் | 47 - 66 |
| அத்தியாயம் - 6<br>முடிவுகளும் சிபார்சுகளும் | 67 - 71 |
| உசாத்துணைகள் | |
| பின்னிணைப்புக்கள் | |